மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஈ) தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியையும், சமத்துவத்தையும் உறுதி செய்திட பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள மிக முக்கியமான அமைப்பான பட்டியலின, பழங்குடியின மாநில ஆணையத்தினை அமைக்க திராவிட முன்னேற்றக் கழக அரசு முடிவு செய்திருக்கிறது. பட்டியலின மக்களுக்கு இடஒதுக்கீட்டினை உயர்த்தி, பழங்குடியின மக்களுக்குத் தனியாக ஒரு விழுக்காடு அளித்து, அருந்ததியின மக்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கி, அவர்களுடைய கல்வி, சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுவரும் அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. அனைத்து சமூக மக்களும் ஒன்றிணைந்து வாழ சமத்துவபுரம் கண்டதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு. அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக இப்பொழுது பட்டியலின,*